## ஈரோடு மாவட்ட நிலஅளவைப்பதிவேடுகள் துறை உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் செயல்முறை ஆணை

### பிறப்பிப்பவர் : வி.அரிதாஸ்

ந.க. அ3/4539/2023 நாள் : 30.06.2025

**பொருள்:** கருணை அடிப்படை நியமனம் - நிலஅளவைப் பதிவேடுகள் துறை - ஈரோடு மாவட்டம் - 20.03.2023-இல் காலஞ்சென்ற சார் ஆய்வாளர் திரு. சி. இளங்கோ என்பவரது வாரிசுதாரரும் மனைவியுமாகிய திருமதி. ச. ரம்யா என்பவருக்கு கருணையின் அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக நியமனம் செய்து ஆணைகள் வழங்கியது - பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடல் - தொடர்பாக.

**பார்வை:**

1. திருமதி.ச.ரம்யா க/பெ. சி.இளங்கோ (லேட்) என்பவரது மனு நாள். 24.05.2023
2. சென்னை, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் செயல்முறை ஆணை எண் ந.க.ர1/13427/2022(11) நாள் 06.01.2025
3. அரசாணை (நிலை) எண் 18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை. நாள்.23.012020
4. அரசாணை (நிலை) எண் 248 நிதி (CMPC) துறை நாள் 20.05.2020
5. அரசாணை (நிலை) எண் 382 நிதி (CMPC) துறை நாள் 24.10.2020
6. அரசாணை நிலை எண். 108, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை. நாள்11.03.2022
7. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யு-1) துறை, நாள். 08.03.2023
8. ஈரோடு மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறை, உதவி இயக்குநரின் செயல்முறை ஆணை எண் ந.க.அ3/4539/2024 நாள் : 09.01.2025
9. திருமதி. ச. ரம்யா, இளநிலை உதவியாளரது பணியேற்பு அறிக்கை நாள் : 10.01.2025
10. அரசுக் கடிதம் எண். 5532/G2/20231 மனித வள மேலாண்மைத் (G2) துறை, நாள் 20.09.2023

11. அரசுக் கடிதம் 1(டி) எண். 64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பணிகள் அலகு பணி- 9 (2) பிரிவு, நாள். 18.01.2024.

-------

**ஆணை :**

பார்வை 2 மற்றும் 8-இல் காணும் கடிதங்களின்படி, ஈரோடு மாவட்ட நிலஅளவைப் பதிவேடுகள் துறை, உதவி இயக்குநர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.ச.ரம்யா என்பவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 10.01.2025 முற்பகல் முதல், பணியேற்பு அறிக்கையின்படி இவ்வலுவலக கட்டுப்பாட்டில் 10.01.2025 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியேற்று பணிபுரிந்து வரும் திருமதி.ச.ரம்யா என்பவருக்கு பார்வை 7 இல் காணும் அரசாணை, பார்வை 10 மற்றும் 11 ஆகிய அரசு கடிதங்களில் உள்ள வழிகாட்டுதல்கள் ஆகியவற்றின்படி, ( " The Services of the Government Servants who are appointed or yet to be appointed, on Compassionate Grounds shall be Regularized as per Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rule 2023"). தனியர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 10.01.2025 முற்பகல் முதல் தனியரது பணியினை இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. மேலும் இவர் மூன்று ஆண்டுகள் பணிக்காலத்திற்குள் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண்பருவம் நிறைவு செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உதவி இயக்குநர்,
நிலஅளவைப் பதிவேடுகள் துறை,
ஈரோடு.

பெறுநர் :

திருமதி.ச.ரம்யா,
இளநிலை உதவியாளர்,
நில அளவை பதிவேடுகள் துறை,
ஈரோடு.

நகல் : சென்னை, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநருக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : கோவை, நிலஅளவைப்பதிவேடுகள் துறை, மண்டல துணை இயக்குநருக்கு தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது

நகல் : கண்காணிப்பாளர் 1, 2, 3

நகல் : அ4, அ7 மற்றும் அ12 இருக்கைகளுக்கு - புதிய எண்ணில்